www.padippakam.com

# தேசபக்தன்

தேசபக்த முன்னணியினர் கழகம் - தமிழீழம். PVOT

## தமிழீழ அராஜக இயக்கங்களின் தலைமைகளே..

இந்திய விரிவாதிக்க அரசின், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின்-
கைக்கூலிகளாக செயற்படுவதை விட்டொழியுங்கள்.!
தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள், இயக்கப் போராளிகள் மேல்
ஏவும் அராஜகங்களுக்கும், படுகொலைகளுக்கும்
முற்றுப்புள்ளி இடுங்கள்.!
தேசபக்த முற்போக்குக் குழுக்களின் தோழர்களைக்
காட்டிக்கொடுப்பது, கைது செய்வது, சித்திரவதை செய்வது,
சுட்டுக்கொல்வதை நிபந்தனையின்றி நிறுத்துங்கள்.!

## விடுதலைப்புலிகள் இயக்கத்தலைமையே.! நீ..

அப்பாவிப்புலிகளை தற்கொலைக்கு நிர்பந்திக்காதே!
தமிழீழ இளைஞர் சமுதாயத்தை தற்கொலைக்குத் தள்ளாதே.!
தேசபக்த போராளி குழுக்களைத் தடை செய்யாதே.. அழிக்காதே!
சக இயக்கங்கள் மீதான இயக்க அழிப்புப் பாதையை கைவிடு.!
தீப்பொறி, பாதுகாப்புப் பேரவைத்தோழர்களை உடன் விடுதலைசெய்!
தமிழீழ-தமிழக மக்களே! தமிழ் அராஜகத் தலைமைகளின்
மக்கள் விரோத, சனநாயக விரோத நடவடிக்கைகளை
சகோதரப் படுகொலைகளை நிறுத்த நிர்பந்திப்போம்.!
தமிழினம் தன்னைத்தானே அழிப்பதை தடுப்போம்!
தமிழினத்தின் சுதந்திரப் போராட்டத்தை வளர்ப்போம்!

---

முகாம்களில் உள்ள தமிழீழ அகதிகளே!

தமிழகத்து மக்களே சிந்திப்போம்

சிறப்பு முகாமிலுள்ள தமிழீழப் போராளிகளே!

---

வெளியீடு : 1991-07-15

PATRIOTIC VANGUARD'S
ORGANIZATION OF THAMILEELAM.

தேசபக்த முன்னணியினர் கழகம்
-தமிழீழம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

முகாம்களில் உள்ள தமிழீழ அகதிகளே!

**தமிழகத்து மக்களே!** **சிந்திப்போம்**

1991-07-01 சிறப்பு முகாம்களில் உள்ள தமிழீழப் போராளிகளே!

---

ராஜீவ் கொலை நிகழ்ச்சியைத் தொடர்ந்து தமிழீழ மக்களுக்கும் - தமிழகத்து மக்களுக்கும் இடையிலான பாரம்பரிய இனம், மொழி, பண்பாடு சார்ந்த மக்கள் உறவுக்கு சுயநல அரசியல்வாதிகளும் அரசுகளும் "வெடிகுண்டு" வைத்து வருகின்றார்கள். இவ் வெடிகுண்டுப் பின்னணியைப் பற்றி சிந்திப்போம், விழித்தெழுவோம். தமிழக - தமிழீழ மக்களுக்கு இடையிலான நல்லுறவை வளர்ப்போம்.

1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் நாயகன் ராஜீவ் காந்தி சென்னையில் மே 21 இல் கொலை செய்யப்பட்டார். அவரைக் கொலை செய்தவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு கொண்டவர்களாக இருக்கின்றார்கள் எனக் காட்டி இலங்கை இனவெறி அரசாலும் சிங்கள இராணுவ அழிப்புக்களாலும் எங்கள் வாழ்வை நிரந்தர மண்ணை இழந்து தமிழகத்து மண்ணில் அகதிகளாக வாழும் எங்கள் மேல் இந்திய மாநில - மத்திய அரசுகள் நிர்ப்பந்தத்தை நெருக்குதலை முடுக்கி விட்டுள்ளன. போராளிகள், புலிகள் வேறு - அகதிகள் வேறு என தங்கள் சுயநலன்களுக்காக கூடி வந்த அரசியல் சுயலாபிகளும் அதிகார கும்பலும் பொய் பேசும் பத்திரிகைகளும் இன்னுமொரே குரலில் "இலங்கைத் தமிழர்கள் பயங்கரவாதிகள்" என முத்திரை குத்தி வருகின்றனர். தமிழக இந்திய மக்களிடமிருந்து இலங்கைத் தமிழர்களை அந்நியப்படுத்தவே இந்த மக்கள் விரோதிகள் குறிவைத்து தாக்குகின்றனர். மக்களிடம் பயபீதியையும் குற்றவாளி மனோபாவத்தையும் வெடிகுண்டு - ஆயுதக் கலாச்சாரம் என எங்களைப் பற்றி வலிந்து ஊட்டி வருகின்றனர். இதன் மூலம் தமிழ - தமிழீழ மக்களுக்கு இடையிலான விடுதலைக் கொள்கை, அனுதாபம், இன-மொழி உணர்வு சார்ந்த நெடிய மக்கள் சக்திக்கு எதிராக இந்தச் சுயலாபிகள் வெடிகுண்டு வைத்து வருகிறார்கள். இதில் சிறிது வெற்றியும் பெற்றிருக்கின்றார்கள்.

இந்திய மத்தியரசு அகதிகளாகிய எங்களை இனவெறி அழிப்பில் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் இலங்கை அரசிடம் ஒப்படைத்து அழிக்க எல்லா முயற்சிகளும் செய்து வருகிறது. தமிழகத்தில் நாங்கள் உணவில் இருந்து உயிர்பாதுகாப்பு வரை உத்தரவாதமில்லா சூழ்நிலையை மாநில அரசு கொடுத்து வருகின்றது. எந்த மனித நேயமில்லாத சர்வதேச அகதி நலனை மீறிவரும் இவ்வரசுகளின் நடவடிக்கைகளுக்கு அரசியல்வாதிகளிடமிருந்து இதுவரை எதிர்ப்புக் குரல் இன்றியே இந்த தீயவர்களின் வெற்றி சாதிக்கப்படுகிறது. பாசாங்கு அரசியல் வாதிகளிடமிருந்து அகதிகள் இனியும் எப்படி எதிர்பார்க்க முடியும் இதை.

'இந்திரா காந்தி கொலையுண்ட போது' ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் அழிக்கப்பட்டு சொத்துக்கள் சூறையாடப்பட்டது. அதேபோல் ராஜீவ் கொலையின் [illegible] விளைவாக தமிழீழ மக்கள் இவ்வளவு மனித அழிவையும் சொத்து இழப்பையும் சந்திக்கவில்லை என்பது உண்மைதான் இதற்கு காரணம் -

www.padippakam.com



அகதிகள் மேல் இருக்கும் மக்களின் அனுதாப அலைகளுக் கெதிராக
த்து மக்களுக்கு இருக்கும் வகோபித்த இன உணர்வும், தமிழீழத்தில்
ராஜீவ் கட்டளையின் பேரில் அமைதிப்படை ? நடத்திய அட்டூழியங்களின்
நினைவுகள் நெஞ்சிலிருப்பதும், உயர்அரசாயர்கள் ஆக்கிரமிப்பு படையை
எதிர்த்து நடத்திய கிளர்ச்சிகளில் ராஜீவ் முகம் மறக்கப்படாதிருப்பதும் அடிப்
படையில் தமிழீழ மக்களின் தேசிய இனத்திற்கான போராட்டத்தின்
நியாயமும் தேவையும் குறிப்பிடும்படியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதும்
ஆகும். தமிழக மக்களது வாழ்வில் மாநிலத்தின் உரிமைகள் மத்தியரசு
களால் நசுக்கப்படுவதும் இந்திமொழி திணிப்புக்கு எதிரான தமிழ் தேசிய
இன உணர்வும் ராஜீவ் காலத்து மகா பீரங்கி ஊழல் கொள்ளையும் சேர்ந்து
ராஜீவ் கொலை மீது பெரும் இழப்புணர்வு தாக்கத்தை தமிழக மக்களிடம்
ஏற்படுத்தவில்லை. தமிழீழ அகதிகள் மேல் சீற்றம் கொள்ளவைக்கவில்லை.

ராஜீவ் கொலைச் செய்தி கேட்டு
சீக்கியர்கள் தங்கள் வீடுகளைப் பூட்டிக் கொண்டு தெருவுக்கு வராதவேளை
சூறையாடுவதற்கு சொந்தக்காரில்லாத அகதிகளாகிய எமம் மனித இழப்பை
கூட ஒற்றை எண்களுக்கு அப்பால் தாண்டாத காரணம் தமிழக மக்களி
டம் இருந்த நல்ல அடிப்படை உணர்வுகள் தான் என்பதை மறக்
கக்கூடாது. இதற்காக நூறுமுறை நன்றி சொல்லக் கடமைப்
பட்டுள்ளோம் தமிழக மக்களுக்கு!

வேதனையான மறுபக்கம் ஒன்றையும்
சொல்ல விரும்புகிறோம். தன் இனத்தை அழித்தும் காட்டிக் கொடுத்தும்
மாநில உரிமைகளை அடகு வைத்தும் ஆட்சிக்கு வருவதில் குறியாக
இருக்கும் கட்சிகளும் அரசியல் பேடிகளும் திட்டமிட்டு தேர்தல் இலாபத்
-திற்காக இட்ட கூக்குரல்களும் சாதித்த மவுனங்களும் மறக்கமுடியாதவை.
கொலையைக் காட்டி மக்கள் உணர்ச்சியைத் தூண்டினர். தொண்டர்களின்
உணர்ச்சியைப் பயன்படுத்தி வட்டத்து ரௌடி அரசியல் தலைகள் தமக்கு
வாய்ப்பான இடங்களில் அகதி முகாம்களைத் தாக்கினர் தீவைத்தனர்.
அகதிப் பெண்களை பாலியல் வன்முறைக்கு கட்டாயப்படுத்தினர்.
தர்மபுரியில் இருவர் சாகடித்து குளத்தில் போடப்பட்டனர். தென்
ஆற்காடு மாவட்டத்தின் முகாமின் 12 குடிசைகள் எரிக்கப்பட்டன.
திருத்துறைப் பூண்டி அகதிமுகாமை குண்டர் படையுடன் காக்கிச்
சட்டைக் காவல்படையும் சேர்ந்து தாக்கினர். புளியம்பட்டியில்
உழைப்புக்கும் உணவு வாங்கவும் வெளியில் சென்ற அகதி
கள் தாக்கப்பட்டனர். பல முகாம்களில் மலிவு விலை மது கொடுத்து
கம்பு பொல்லுகளுடன் வெறியில் வந்த அரசைக் கூட்டம் தாக்
கியது. ரௌடி அரசியல் கும்பலின் அட்டகாசம் வெற்றியளித்தது சிலமணி
நேரங்கள் மட்டுமே. ஒரு இனவெறியரசிற்கும், இராணுவத்திற்கும் எதிராக
யுத்தத்தை நடாத்திக் கொண்டிருக்கும் தமிழீழ தேசத்தின் அகதிகளாகிய
எங்களிடம் சில நிமிடங்கள் தான் அவர்களின் ரவுடித்தனமும் ஆண்மைத்
தனத்தின் கொடூரத்தையும் வெளிப்படுத்த முடிந்தது. அகதியும் மனிதன்
தானே. அவனுக்கும் உணர்வுகள் உணர்ச்சிகள் உண்டு தானே-
பொறுமைக்கும் எல்லையுண்டல்லவா? சில முகாம்களில் அரசியல்
குண்டர்களின் அடுத்த நடவடிக்கையை எதிர்பார்த்து ஆண், பெண்
அகதிகள் தற்காப்புக்குத் தயாராய் இருந்தனர். நினைத்தபடியே லொ
-றிகளில் வந்த குண்டர்களின் கொக்கரித்த குரலுக்கு பதிலாக தமிழீழ
அகதிகள் தங்கள் மொழியில் துப்பாக்கி, தோட்டா, வெடிகுண்டு-

படிப்பகம்

www.padippakam.com



என முழங்கி அச்சுறுத்தியதும் வந்தபடை வந்த வழியே கம்பு, தடி கால் நடுக்க தலை தெறித்து ஓடியது. இது அகதிகளின் தற்காப்பு வார்த்தைக்கு கிடைத்த பலனாகும்.

இந்திராவின் கொலையை ஒட்டி சீக்கியர்களின் வாழ்வில் ஏற்படுத்தப்பட்ட துயரம் ராஜீவ் கொலையின் பின் குறிப்பிட்ட எந்த தேசிய இன பிரிவு மக்கள் மேலும் நடக்கவில்லை. என நிம்மதிப் பெருமூச்சு விடும் இந்திய ஜனநாயக அறிவாளர் கூட்டம் தேர்தல் கட்சிகளின் சொத்துக்கள் நன்றாக தாக்கப்பட்டதை நல்லபடியே நினைவு கூர்கின்றனர். ஆனால் அகதிகள் மேல் நடத்தப்பட்ட அக்கிரமங்களை, முகாம்களை அடித்துக் நொருக்கிய காட்சிகளை யாரும் கண்டு கொள்ளவில்லை. சர்வதேச மனித உரிமைகள் பற்றிப் பேசுபவர்கள் உட்பட அரசியல் ஆதாயத்திற்காக வேணும் இவர்கள் கண்டனம் வேண்டாம் அனுதாபம் கூடத் தெரிவிக்கவில்லை. அமைதிப்படையின் அக்கிரமப் செயல்களை எதிர்த்து லாபத்திற்காக குரல் விட்ட கட்சிகள் அப்படைக்கு அரசியல் தலைமை கொடுத்த ராஜீவ் கொலையின் சோகத்தில் திக்கத்தில் அகதிகள் மேல் நடத்தப்பட்ட மனிதப்பண்பற்ற செயல்களுக்கு குரல் கொடுக்க நாதியின்றி இருக்கும் சோக வேடிக்கைதான் உலகிலேயே பெரிய இந்திய ஜனநாயகம்? பற்றிப் பேசும் அனைவரதும் உண்மை சொரூபத்தை தமிழீழ அகதிகளுக்கும் சர்வதேச அகதிகளுக்கும் இனம் காட்டி நிற்கிறது.

ராஜீவ் கொலையைத் தொடர்ந்து தமிழீழ அகதிகள் மீது நடத்தப்பட்ட நேரடி வன்முறைகள் இந்திய சட்டத்தில் இல்லாத அரசு அதிகாரிகளால் நேரடியாக தலைமை தாங்காதவை தான் ஆனால் சட்டத்தை உருவாக்கும் அரசியல்வாதிகள் சிலர் பின்னணியில் இருந்தார்கள். அகதிகளாக தமிழ் நாட்டில் காலடி வைத்த போதே எம்மைப் பற்றிய எல்லா உண்மைத் தகவல்களையும் கொடுத்து பதிவு செய்து வீட்டுக்கு ஒரு பொறுப்பானவர் புகைப்படம் ஒட்டியும் கொடுத்தும் அகதி அட்டை பெற்ற நாங்கள் இந்திய அரசின் அகதிகள் சட்டத்திற்கு ? உட்பட்டு நேர்மையுடன் வாழ்ந்து வருகிறோம். உணவு, உடை, உறையுள் என ஆயிரம் கஷ்டங்கள் எம் வாழ்வில் மோதிய போதும் நெருக்கடியற்ற உயிர் வாழ்வுக்குள்ள உத்தரவாதத்தை எண்ணிக் கொண்டு முகாம்களுக்கு வெளியே சென்று தமிழகத்தில் உள்ள ஒரு கூலிக்கு வழங்கப்படும் ஊதியத்தை விடக் குறைந்த கூலிக்கு வேலை செய்து உடல் உழைத்து வயிற்றைக் கழுவி வந்தோம். வாழ்க்கையை தள்ளி வந்தோம். எங்கள் அகதி வாழ்வின் மீது ராஜீவ் கொலையைக் காட்டி அரசியல் நடத்தி அரசாள்பவர்களின் பொய் பிரச்சாரத்தால் அகதிப் பெண் ஒவ்வொன்றும் சுபாவாகவும் அகதி ஆண்கள் சிவராசன்களாகவும் பார்க்கப்பட்டு வருகின்றோம். எங்களுக்கு அகதி முகாமை விட்டு வெளிக்காற்றை சுவாசிக்கும் சுதந்திரம் இல்லை. உழைத்து வாழ உரிமை மறுக்கப்படுகின்றது. வேலை கொடுக்க பெரிய மனிதர்? பயங்கொள்கின்றனர். செய்த வேலைக்கு கூலி இல்லையென்று விரட்டுகின்றனர். அவர்களது பயமான சட்டம் ஒழுங்கை அகதிகள் மீறுவதாகவும் எங்கள் மீது தூற்றுகின்றனர்.

எங்களுக்கு தஞ்சம் அளித்த தமிழக மக்களை அரசினதும் அரசியல்வாதிகளினதும் அறிக்கைகளும், அதிகார வர்க்கத்தினதும் காக்கிச் சட்டைகளதும் அச்சுறுத்தல்களும் அஞ்சி நடுங்க வைக்கிறது மக்களை. தமிழீழ அகதிகளைப் பற்றி கூடிப் பேசவோ உணவுக்கு,—

படிப்பகம்

www.padippakam.com



அரசியல் வாதிகளு
மருந்துக்கு உதவவோ முடியாது திகைக்கின்றனர். அரசியல் வாதிகளும் உதவும்படி
அரசும் தங்களுக்குத் தேவைப்பட்ட போது தமிழீழ மக்களுக்கு உதவும்படி அனுசரணைக்
விட்ட பழைய அறிக்கைகளையும் அதிகார வர்க்கம் செய்த அனுசரணைகள்
ளையும் நினைத்து அரசியல் வாதிகளின் பொய் முகங்களைக் கண்டு வருகின்
றனர். தமிழீழ மக்களின் விடுதலைக்கு குரல் கொடுத்த தமிழக மக்
கள் தங்களது கைகளில் உள்ள விலங்குகள் சுதந்திரம் பற்றியும்
சிந்திக்க துவங்கி வேண்டிய தேவையை இன்றைய சூழல் அவர்க
ளுக்கு வழங்கியிருக்கின்றது.

அகதிகள் உரிமைச் சட்டம் பற்றிய

அகதிகள் நலன் இவற்றை
இந்திய வரையறைகளையும் மீறி மனித உரிமைகள், அகதிகள் நலன் இவற்றை
காலில் போட்டு மிதித்துக் கொண்டு இந்திய காவல் துறையும், உளவுத்துறை
யும் தலையை விட்டு விட்டு வாலைப் பிடிக்க அல்லது எச்சத்தைப் பார்
க்க அகதி மத்தியில் சோதனை நடத்துகிறது. சோதனைகளின் போது
எவ்களது உணர்வுகளும் கிழ்த்தரமாக அவர்களால் சோதிக்கப்படுகின்றன.
ஒரு இறந்த வெடிகுண்டுப் பெண்ணுக்கு அடையாளம் காண ஆயிரமாயிரம்
அகதிப் பெண்களின் புகைப்படத்தை சட்டத்தின் துணையைக் காட்டி
சர்வதேச அகதிகளின் நலனை, உரிமையை மீறுகிற வகையில் உருவ
அடையாளத்தை அகதிகளிடமிருந்து பறித்துக் கொண்டிருக்கின்றார்
கள் தலையும் மாலையும் கையெழுத்துப் போட நிர்ப்பந்திக்கிறார்கள்.

ராஜீவ் கொலைக்கதை ஜாமினில்

திடப்பட்டிருக்கும் லட்சம் அகதிகளாக நாங்கள் வாழ்கிறோம் 12
வயதில் இருந்து 40 வயது வரையிலான ஆண் - பெண் அகதிகளின்
புகைப்படம் எடுக்கப்பட்டும் அனைவரதும் கைரேகைகளும் பதிவு
செய்யப்பட்டும் உள்ளது. இவை எதைக் காட்டுகிறது ராஜீவ்
கொலையைக் காட்டி அகதிகள் மீது நெருக்குதலும்
நிர்ப்பந்தங்களும் கொடுக்கப்படுவதைத் தானே! சர்வதேச
அகதிகள் நலனை, உரிமையை இந்திய அகதிகள் சட்டம்?
மீறியுள்ளது என்பதையே தான். இலங்கை இனவெறியரசுக்கு தமிழீழ
மக்களிடம் இருந்து எடுக்கப்பட்ட விபரங்கள் அனைத்தையும் இந்திய
மத்தியரசு கொடுத்து விட்டது உறுதி செய்யப்பட்டுள்ளது. சிங்களபேரா
ந்த இனவெறியரசுக்கு இந்தியரசு தமிழீழ அகதிகளையும் கூட காட்டிக்
கொடுக்க துவங்கியுள்ளது.

ராஜீவ் கொலைக்குப் பின் இந்திய ஜனநாயகத்
தின் பத்திரிகைத் துறைக் காவலர்களின் தலைகீழான மாற்றம் பற்றி
யும் கொஞ்சம் சிந்திக்கிறோம். அறிவு குறைந்தவர்கள் என அவர்களா
ல் கணிக்கப்படும் அகதிகள் 1983 இல் இருந்து தமிழீழப் போராட்டத்தின்
நியாயம் பற்றி தமது பார்வையில் எழுதியும் தமிழீழ மக்கள் சந்தித்து
வரும் கொடுமைகள் குறித்து புகைப்படங்களாகவும் செய்தியாகவும் வெ
ளியிட்டு வந்த பத்திரிகைகள் 1987 க்குப் பின் பெரிய பத்திரிகைகள் தங்
கள் பாதையை அப்படியே எழுதிய போதும் நடுத்தர, சிறிய மற்றும் தமி
ழ் பத்திரிகைகள் ~~தங்கள் பாதையை அப்படியே எழுதிய போதும்~~ போ
ராட்ட களத்தின் உண்மை நிலைமைகளையும் நிர்க்கதியான மக்களி
ன் வாழ்நிலை படங்களையும் பிரசுரித்து வந்தனர். எப்போதும் அகதி
கள் நலன் பற்றி நிறையவே எழுதி வந்தன ஆனால் ராஜீவ் கொலையின்
சோகம் அவர்களையும் விட்டு வைக்கவில்லை.

www.padippakam.com



அந்த ஒருவரது சோகத்தை தங்கள் பக்கங்களில் நிரப்பி காட்டுகின்ற அளவுக்கு லட்சோப லட்சம் அகதி மக்களின் உத்தரவாதமில்லாத ஏக்கம் கொண்ட வாழ்க்கை பற்றியும் எதிர்கால ஒளிபற்றியும் அவர்களது பேனா ஜனநாயகத்துடன் எழுத மறுக்கிறது. அகதிகளின் எரிந்த வீடுகள் தாக்கப்பட்ட அகதிகளை அவர்களின் ஜனநாயக புகைப்படக் கருவிகள் படம் பிடிக்க கூட மறுக்கின்றன. இப்போது தான் இந்தப் பத்திரிகைகளின் பத்திரிகை தர்மம் யாரின் நலனுக்காக நிற்கிறது என சிந்திக்க வைத்துள்ளது.

ராஜீவ் கொலையில் தமிழீழ இயக்கங்களின் பங்கும் பார்வையும் தமிழ் மக்களது போராட்ட வரலாற்றில் அகதிகள் ஒரு மோசமான காலத்தை தாண்ட வேண்டியிருப்பதை காட்டுகிறது. ராஜீவ் கொலையில் புலிகள் கடைசிப்பாத்திரமான தீர்த்துக் கட்டும் வேலைக்கு பொறுப்பாக இருந்திருக்கின்றார்கள். (அப்படியானால் ராஜீவ் கொலையில் சில அரசுகளும் உளவு நிறுவனங்களும் முதல் பாத்திரத்தை செய்திருப்பதாக பொருள் கொள்ளலாமா?) இதுவரையிலான கைதுகள், புலிகளின் பேச்சுக்கள் தெரிவிக்கின்ற போதும் உறுதி செய்யப்படவில்லை என்பது ஒரு வகை. ராஜீவ் கொலையை தொடர்ந்து மற்றைய இயக்கத் தலைமைகள் நான், நீ என போட்டி போட்டுக் கொண்டு ராஜீவ் கொலையின் மர்மங்களைப் பிடிக்க எல்லா முயற்சிகளிலும் அரசுகளுக்கு உதவுகிறார்கள். (இலங்கை சிறைகளில் இருந்த, மாலைதீவு ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியின் 40 PLOT கைதி போராளிகள் இந்திய இலங்கை அரசுகளால் ஆயுதம் கொடுக்கப்பட்டு PLOT தலைமை வழிகாட்டலில் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு மர்மங்களை தேட வவுனியாவிற்கு வந்துள்ளார்கள்) ராஜீவுக்கு அஞ்சலி செலுத்துவதிலும் அவரது கனவான இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை நனவாக்குவதிலும் உறுதி எடுத்துக் கொண்டுள்ளார்கள்.

தமிழீழ மக்களின் அகிம்சை — ஆயுதத் தலைமைகள் எதுவும் தமிழீழ அகதிகளாகிய எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகள், நிர்ப்பந்தங்கள், பாதிப்புக்கள் தொடர்பாக நன்றாக தெரிந்து இருந்தும் வாய்திறக்காது உள்ளனர். இது இனியும் பழைய இயக்கத் தலைமைகளை அகதிகள் நம்பக் கூடாது என்பதை தெட்டத் தெளிவாக காட்டுகிறது. ஆரம்ப காலங்களில் இருந்து ஏட்டிக்குப் போட்டியாகவும் ஒருவரை மற்றொருவர் அழிப்பதிலும் உறுதிபூண்ட இந்த சுய நலத் தலைமைகள், அதிகார ஆசைத் தலைவர்கள் மாறி மாறி நூற்றுக் கணக்கான போராளிகளை கொன்றனர். ஆயிரக்கணக்கானவர்களை களையெடுத்து களத்தில் இருந்து அந்நியப்படுத்தினர். தலைமைகளால் பயன்படுத்தப்பட்ட அப்பாவி போராளிகள் இன்று சிறப்பு முகாம் அகதிகளாக காலத்தை ஓட்டி வருகின்றனர். இவர்கள் தமது கடந்த கால பாதையையும் கொள்கை கோட்பாடற்ற தலைமைகளுக்குப் பின்னால் ஆயுதக் கவர்ச்சியில் செய்த தவறுகளையும் சுய ஆய்வுக்கு உட்படுத்தி வருகிறார்கள். சரியான தேச விடுதலைப் பாதையை நோக்கி திரும்புகிறார்கள்.

அகதிகளாகிய எமது கேள்வி என்னவென்றால் ராஜீவ் மரணம் அந்தவிதத்திலும் தமிழீழ மக்களின் பொது அரசியல் வாழ்~~க்கை~~வுக்கோ தனிப்பட்ட குடும்ப வாழ்வுக்கோ இழப்பல்ல.

படிப்பகம்

www.padippakam.com



இந்த ராஜீவ் ஆட்சியில் தான் இந்தியப்படைகள் எமதுமண்ணில் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களை கொன்று குவித்தது. பல பெண்களை பாலில் பலாத்காரத்திற்கு உட்படுத்தியது. இலட்சம் குடும்பங்களை நடுத்தெருவுக்கு தள்ளியது அமைதியின் பெயரால் இரத்தத்தில் தோய்ந்த இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எழுதியது. தமிழீழ மக்கள் தமது சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தின் தடைக்கல்லாக துரோக ஒப்பந்தமாகவே பார்க்கிறார்கள் ஏன்? இந்த தமிழீழ துரோக தலைமைகள் இரத்தம் தோய்ந்த அந்த ஒப்பந்தத்தை தூக்கி பிடித்துக் கொண்டுள்ளார்கள்?. புலிகளின் ஏக இயக்க அழிப்பு தனி இயக்க சர்வாதிகாரத்தை மக்கள் சக்தியுடன் முறியடிக்க முடியாத இந்த தலைமைகள் புலிகளுக்கு எதிரான எந்த பிற்போக்கு அரசுகளுடனும் மக்கள் விரோதிகளுடனும் சேரலாம் என்ற முடிவை எடுக்க வைத்த அரசியல் வறுமை காரணம் தான் என்ன? இத்தலைமைகள் மக்களை உண்மையாக நேசித்து, மக்களை சார்ந்து இருக்கவில்லை. நம்பவில்லை என்பது தான் உண்மை.

புலிகளோ எந்த எந்த அரசுகளுடன் தமக்கு தேவைப்படும் போது தேன்நிலவு பேச்சுவார்த்தையும் தேவையானால் யுத்தமும் தமிழீழ மக்களின் நலன் என்ற பெயரில் நடத்துகிறார்கள். மற்றைய இயக்கங்களையும் போராளிகளையும் கோரத்தனமாக அழித்து விட்டு பல காரணங்கள் கூறுவார்கள். புலிகளின் தனி இயக்க அதிகார வெறியும் மக்கள் விரோத தன்மையும் போராட்டத்தின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெளிப்பட்டு வருகிறது. மிக அண்மைக் காலத்தில் மக்கள் நலனிற்காக சிந்திக்கின்ற முற்போக்கு எண்ணம் கொண்ட தீப்பொறி குழுவின் 5க்கும் மேற்பட்ட முக்கிய தோழர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள். கொலை செய்திருக்கலாம் என நம்பப்படுகிறது. புலிகளின் யுத்த முறை மக்களின் விடுதலையை சாதிக்க கூடியதல்ல என்பது ஒவ்வொரு யுத்த நடவடிக்கைகளும் தெளிவுபடுத்தி வருகின்றது. மக்களை காக்க முடியாத நிலையை நெருங்கிக் கொண்டிருக்கிறது. விடு புலிகளின் தலைமை தனது தவறுகளை சிந்திக்க மறுப்பது ஏன்? தொண்டர்களாக இரத்தம் தோய்ந்த தோல்விகளுக்காக மக்களையும் இளைஞர்களையும் நிர்ப்பந்திப்பது ஏன்? தவறான யுத்தமுறையால் அடுத்த சந்ததியை அழித்த பின் எப்படி சுதந்திரம்? யாருக்கு தமிழீழம்? என்ற கேள்விகள் எங்களை சிந்திக்க வைக்கின்றது. இந்தியரசு ஆதரவு - இந்திய மக்கள் எதிர்ப்பு, இந்தியரசு எதிர்ப்பு - இந்திய மக்கள் ஆதரவு என இரண்டு பாதைகள் நிலவுவே செய்யும், ஒரு சரியான மக்கள் பாதை இலங்கையில் மலரும் வரையில்.

1987 ஒப்பந்தத்தின் போது அகதி வாழ்வில் பெரும் அமைதி வந்து விட்டதாக நினைத்து தமிழீழம் சென்ற எங்கள் பலரது அமைதியை இந்தியப் படைகளும் புலிகளும் யுத்தத்தினால் திசை மாற்றினர். யுத்தத்தினால் இலங்கைப் படைகளுக்கு கொஞ்சமும் குறைந்ததல்ல இந்தியப் படை என்பதை தமிழீழ மக்களுக்கு நிரூபித்து விட்டு இந்தியப்படை திரும்பியது.

படிப்பகம்

www.padippakam.com



புலிகள் - இலங்கை அரசு தேன்நிலவு முடிந்து யுத்தம் தொடங்கியது இந்த இரண்டு யுத்தங்களிலும் மேலும் பல புதிய அகதிகளுடன் மீண்டும் தமிழகம் வந்தோம். இந்தக் காலங்கள் அகதிகளின் வாழ்வில் புது சரித்திரம் ஒன்றையும் எழுதியது. இயக்கத் தலைமைகள் கூட தங்கள் அரசியல் ஆதாயங்களுக்காக தமது இயக்கங்கள் மீது மங்கிய சர்வதேச அனுதாபத்தை புத்துயிர்ப்பிக்க இந்தியரசின் பார்வையை மீண்டும் திருப்ப இந்தியாவுக்கு அகதிகளாக செல்ல உதவி புரிந்து கூட்டிச் சென்றன. பலமுக நிர்ப்பந்தங்களைக் கொடுத்தனர். வேறு ஒரு தருணத்தில் தமது இயக்கக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் விமானப் படையின் குண்டு வீச்சுக்களால் பாதிக்கப்பட்டவர்கள் உயிர்காக்க வழியின்றி கடலில் கிளம்பிய போது தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் பற்றிய உண்மை நிலையை மறைக்கவும் தமது இயக்கத்திற்கு தேவையான மனித பலத்தை நிவர்த்திக்கவும் நடுக்கடலில் வழி மறித்து "அகதிகளாக செல்ல முடியாது வாருங்கள் அந்து சாவுங்கள்" என மிரட்டி அழைத்து சென்றதையும் நாங்கள் மறக்கமுடியுமா? நமது அகதி வாழ்வு இயக்க தலைமைகளின் கைகளிலும் பகடைக் காயாகவே பயன்படுத்தப் பட்டுவருகிறது.

இப்படியாக இயக்கத் தலைமைகளின் குறுகிய கண்ணோட்டம் கொண்ட நடவடிக்கைகள் எல்லாம் எதிரிகளால் தமிழீழ சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் நியாயத்தை களங்கப்படுத்தவும் போராளிகளையும் அகதிகளையும் - தமிழக, இந்திய மக்களிடமிருந்து அந்நியப்படுத்த பேருதவி புரிந்து வருகிறது. புலிகளின் பரப்பு கதையாயும் ராஜீவ் கொலைக்குப் பின் அம்பலப்பட்டிருக்கின்றது. 'இந்திய மண்ணில் புலிகள் அகிம்சைக்காரர்கள்' என்ற சில் உடைக்கப்பட்டுள்ளது. தமிழீழப் போராளிகளுக்கும் - தமிழக இந்திய மக்களுக்குமிடையிலான உறவில் பெரும் இடைவெளியை இயக்க தலைமைகளின் தவறான நடவடிக்கைகளும் இந்திய கயவாளி அரசியல்வாதிகளின் பிரச்சாரங்களும் அரசு இயந்திர நடவடிக்கைகளும் செய்து கொண்டிருந்த போது 'ராஜீவ் கொலையின் பின்புலங்களை பயன்படுத்தி தமிழீழ மக்களுக்கும் - தமிழக மக்களுக்கும் இடையிலான நீண்ட உறவின் பிணைப்பை அறுக்க எதிரிகள் கடும் முயற்சி எடுத்து வருகிறார்கள் என்பதே இன்றைய கடைசி நிலவரம்.

இனிமேல்:-

www.padippakam.com

இனிமேல்:- நாங்கள் அகதி வாழ்வை மாற்றப் போராடப்போகிறோம்
தமிழக மக்களே உங்கள் தார்மீக ஆதரவைத் தாருங்கள்

* அகதிகளே! தமிழக இந்திய மக்களுக்கு எங்களது இன்றைய துயர நிலைமையை புரிய வைப்போம். மக்களுக்கிடையே யான உறவை வளர்ப்போம்.

* தமிழக - இந்திய மக்களே! சுயநல அரசியல்வாதிகளும் கட்சிகளும் உங்கள் மேல் கிளப்பி விடும் பொய்புரட்டுகளை பய பீதியை நம்பாதீர்கள். நியாயத்துடன் சிந்தியுங்கள்!

* தமிழக மக்களே! இலங்கை இனவெறியரிடம் ஒப்படைக் கப் போகும் மாநில மந்திரிகளின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துங்கள்.

* வெளிநாடுகளில் வாழும் சக தமிழ் அகதிகளே! உலகநாடு களில் உள்ள அகதிகளுக்கும் மக்களுக்கும் எங்கள் நிலை யைத் தெரிவியுங்கள் உலக மக்களின் ஆதரவைத் திரட்டுங்கள்.

* எங்கள் அகதி வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைக்க இலங்கை அரசின் இன அழிப்புக்கு எதிராகவும் இயக்க தலைமைகளின் அராஜகங்களுக்கு எதிராகவும் தேசபக்தி போராட்டத்தில் பங்கு கொள்ளப் போகிறோம்!

* தமிழீழ அகதிகளே! எங்கள் சுதந்திர வாழ்விற்காக நாங்களே ஒன்றுபடுவோம். புதுவழி காண்போம்.

---

வெளியீடு:-
தேசபக்த முன்னணியினர் கழகம் - தமிழீழம்.
PATRIOTIC VANGUARDS ORGANIZATION
OF THIMILEELAM. - PVOT -

படிப்பகம்

www.padippakam.com

தமிழ்நாட்டு முகாம்களில் உள்ள அகதிகளே
தமிழகத்து முகாம்களில் உள்ள போராளிகளே
தமிழீழ அகதிகளே.. போராளிகளே..

"ஒவ்வொரு தேசத்தின் சுதந்திரப் போராட்டத்திலும்
அதன் குறிப்பிட்டக்காலப் பகுதியில் மக்கள் திரளின்
குறிப்பான பிரிவு கிளர்ச்சியின் களமாகவும்
போர்க்குணத்திடனும், மதிப்பிடற்கரிய தியாகம்செய்தும்
வழிகாட்டியும் வரலாற்றில் சுவடுகள் பதிப்பது
இயல்பானது. தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப்
போராட்ட வரலாற்றின் வளர்ச்சியில் தமிழீழ அகதிகளா
கிய நாம் போரின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு
கிளர்ச்சியின் பெருங்களமாக விளங்கி, அர்ப்பணிப்பு
உறுதியுடன் முன்வழிகாட்டவும் வேண்டிய சமூகத்
தேவையை எங்கள் நிர்க்கதியற்ற வாழ்நிலையும், யுத்தத்
திநைல் முடிவின்றி சிதறிச்செய்யும் தேசத்தின் பொருளா
தாரமும், அரசியலும், கலாச்சாரமும், எம்மைப் போராட
செய்கிறது. போராட்டத்தில் நாம் தெளிவுடன் கூடவே
உறுதியுடன் கொடுக்கும் தோள்கள் தேச சுதந்திரத்தை
மக்கள் விடுதலையை வென்றெடுக்கும்."

வாசகர்களே..

அரசாங்கங்கள், அராஜக இயக்கங்கள், இவற்றின்
சகிக்க முடியாத கடுமையான நெருக்கடிகளுக்கு
மத்தியில் "தேசபக்தன்" உங்கள் கைகளில் தவழ்கிறான்
நீங்கள் தமிழீழ சுதந்திரத்திற்காக நிற்கும் கைகளுக்கு
தேசபக்தனை மாற்றுவதன் மூலம் அவர்களது
சிந்தனைகளில் தவழச்செய்து உதவுங்கள்.

வாசிப்போம் தேசபக்தன்

விமர்சிப்போம் தேசபக்தனை

ஒன்றுபடுவோம் தேசவிடுதலைப் போரில்

நாம் வாழ வேண்டுமானால்
போராட வேண்டும்
நாம் வெல்ல வேண்டுமானால்
போராட்டம் தொடர வேண்டும்

படிப்பகம்